**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.105/25**

**வழக்கு சாட்சி: PW.5**

**தேதி: 24.07.2026**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **கண்ணன்** (LW7 ) | | |
| **தந்தை பெயர் :** | கணேசன் | **தொழில்:** | பேருந்து நடத்துனர் |
| **கிராமம்:** | ராமசாமி நகர் | **சமயம்:** | |
| **தாலுகா:** | சிவகங்கை | **வயது:** | **48/2026** |

(எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

## முதல் விசாரணை

1. நான் சிவகங்கை இராமசாமி நகரில் குடியிருந்து வருகிறேன், எனது சொந்த ஊர் நாட்டாகுடி கிராமம் . அரசு பேருந்தில் நடத்துனராக பணிபுரிந்த வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கில் சம்பவத்தில் இறந்து போன கணேசன் எனது அப்பா. எனது அப்பா நாட்டாகுடி கிராமத்தில் ஊரில் பெரிய மனிதர், ஆஜர் எதிரியும் நாட்டாகுடி கிராமத்தை சேர்ந்தவர்.

2. எனது அப்பா கிராமத்தில் உள்ள அய்யனார் கோவில், பிள்ளையார் கோவிலை ஏற்று நடத்தி வந்தார். மேற்படி கோவில்களுக்கு 07.08.2024 ம் வருடம் கும்பாபிஷேகம் நடந்தது. ஆஜர் எதிரி அப்போது பிள்ளையார் சிலையை ஊரில் உள்ள கண்மாய் கேணியில் தூக்கி போட்டு விட்டார். அதிலிருந்து எதிரிக்கும் எனது அப்பாவுக்கு தகராறு ஏற்பட்டது. மேற்படி சிலையை நாங்கள் எடுத்து கும்பாபிஷேகம் நடத்தி முடித்துவிட்டோம்.

3. அதன் பிறகு 48 நாள் பூஜை நடக்க இருந்தது , அப்போது ஆஜர் எதிரி அடிக்கடி தகராறு செய்து கொண்டிருந்தார். கும்பாபிஷேகம் தானே நடத்தி முடித்தீர்கள் 48 நாள் பூஜையை எப்படி நடத்துகிறீர்கள் என்று பார்ப்போம் என்று சொல்லி எனது தந்தையை மிரட்டினார்.

4. எனது அப்பாவும் அம்மாவும் நாட்டார்குடியில் டீ கடை நடத்தி வருகிறார்கள்.

04.11.2024 தேதி காலை 05.00 மணி அளவில் எனது அப்பாவும் அம்மாவும் டீ கடை திறக்க வந்திருக்கிறார்கள். அப்போது ஆஜர் எதிரி அருவாளால் எனது அப்பாவை டீ கடை பக்கத்தில் வைத்து வெட்டி கொலை செய்து விட்டார் . எனது அம்மா போன் செய்து எனக்கு தகவல் சொன்னார் . அதன் பிறகு நான் நாட்டார்குடிக்கு சென்றேன் . நான் சென்று பார்த்த போது இரத்த வெள்ளத்தில், பின்னால் முதுகிலும், விலாவிலும், நெஞ்சிலும், வலது கை அக்குளுக்குள் கீழும் வெட்டுபட்டு கிடந்தார்.

5. ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்த பிறகு எனது அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள் அதன் பிறகு போலீசாருக்கு தகவல் சொன்னோம் . போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். எதிரி அவரது மனைவியையும், பாட்டியையும் வெட்டி விட்டு வந்ததாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எனது அப்பா அரங்காவல் குழு தலைவராக இருந்தார என்றால் அப்படி இல்லை அரசால் நியமிக்கப்பட்ட அரங்காவலர் இல்லை என்றால் சரிதான் . நான் சொன்ன கோவில்களை நிர்வாகம் செய்ய கிராம கமிட்டி இருந்ததா என்றால் இருந்தது , கமிட்டியில் யார் யார் இருந்தார்கள் என்றால் பொன்னம்பலம் , இராமலிங்கம், மலைராஜ், சந்திரன், ராமன், இன்னும் சிலர் இருந்தார்கள். நான் சொன்ன மேற்படி நபர்கள் சேர்ந்து எனது அப்பாவிற்கு கோவில்களை நிர்வாகம் செய்ய அதிகாரம் குடுத்திருந்தார்கள் என்றால் சரிதான் . அவ்வாறு அதிகாரம் கொடுத்தற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் ஊரில் பேசி முடித்தது தான் . இந்த விவரத்தை ஆய்வாளர் விசாரணை செய்யும் போது சொன்னேன் என்றால் சரிதான்.

2. ஊரில் பஞ்சாயத்து தலைவர் ஒருவர் உள்ளார் என்றால் 5 ஊருக்கு சேர்த்து பஞ்சாயத்து தலைவர் உள்ளார் அவர் மாத்தூரை சேர்ந்தவர் . நாட்டார்குடிக்கும் மாத்துாருக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 3 கிமீ இருக்கும். பொது குடிநீர் குழாய்களை நிர்வாகம் செய்வது எனது அப்பா இல்லை என்றால் சரிதான் . எதிரி பிள்ளையார் சிலையை கண்மாய் கேணிக்குள் துாக்கி போட்டதாக நான் சொன்ன விஷயம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஊர்காரர்கள் எல்லோருக்கும்

தெரியும். பிள்ளையார் சிலையை கண்மாய் கேணிக்குள் தூக்கி போட்டது சம்பந்தமாக எனது அப்பாவோ ஊரில் உள்ளவர்களோ எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. எனது அப்பா கிராமத்தின் நாட்டாமை அல்லது அம்பலக்காரன் இல்லை என்றால் சரிதான்.

3. நான் சொல்வது போல் எனது அப்பா எந்த கோவிலையும் நிர்வாகம் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 48 நாள் மண்டல பூஜை என்று நடந்தது என்றால் 5–ம் தேதி நடக்க இருந்தது 4–ம் எனது அப்பா கொலை செய்யபட்டுவிட்டார். செப்டம்பர் மாதம் 7–தேதி கும்பாபிஷேகம் நடத்திருக்குமே ஆனால் நவம்பர் 5–தேதி 48 நாள் மண்டல பூஜை நடக்ககாது என்றால் ஊடையில் ஒரு கேதம் (இறப்பு ) நடந்ததால் தள்ளி போனது.

4. எனது அப்பாவிற்கும் வேறு சமூகத்தை சேர்ந்தவருக்கும் தேர்தல் சம்பந்தமாக விரோதம் இருந்தது என்றும் அந்த விரோதத்தில் வேறு யாரோ எனது அப்பாவை கொலை செய்து விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல . எதிரி எனது அப்பா கும்பாபிஷேகம் நடத்த கூடாது என்று விரோதம் கொள்ளும் அளவிற்கு எதிரிக்கும் எனது அப்பாவிற்கு என்ன பிரச்சனை என்றால் பிள்ளையார் சிலையை தூக்கி போட்டது தான் பிரச்சனை. நான் சொன்னது போல் பிள்ளையாரை எதிரி கேணிக்குள் போடவில்லை என்றும் பிள்ளையாரை எதிரியோ வேறு யாரோ கேணிக்குள் போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5. தண்ணீர் வரவில்லை என்பது கிராமத்திற்கே தண்ணீர் வரவில்லை என்று பஞ்சாயத்து தலைவரிடம் தான் எதிரியும் கிராம மக்களும் முறையிட்டார்கள் என்றும் எனது அப்பாவிடம் தண்ணீர் சம்பந்தமாக எதிரி எதுவும் முறையிட வில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. 04.11.2024 தேதி எதிரிக்கு மிகப்பெரிய விபத்து நடந்து அவரால் நடக்க முடியாத நிலை என்று சொன்னால் சரியல்ல. நான் சென்று பார்க்கும் வரை எனது அப்பாவின் உடல் சம்பவ இடத்தில் கிடந்ததா என்றால் ஆமாம். எனக்கு எத்தனை மணிக்கு தகவல் சொன்னார்கள் என்றால் காலை 05.00–05.30 மணிக்குள் சொன்னார்கள். நான் சம்பவ

இடத்திற்கு செல்வதற்கு 3/4 மணி நேரம் சஆகும் என்றால் 15 நிமிடத்திற்குள் சென்றேன். நான் போகும் போதே போலீசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் இல்லை. நான் போன் செய்து தான் போலீசார் அங்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 06.00–06.30 மணிக்குள் வந்தார்கள்.

7. போலீசார் வருவதற்கு முன் எனது அப்பாவின் உடலை நான் புரட்டி பார்த்தேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல் எதிரிக்கும் எனது அப்பாவிற்கும் எந்த முன் பகையும் கிடையாது என்றும் போலீசார் சொல்வதற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு , என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் இன்றைய தினம் (24.07.2026) சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

RAMALINGAM V

Digitally signed by RAMALINGAM V
Date: 2026.07.24 18:36:04 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
சிவகங்கை.